# ரூ.197.81 கோடியில் - வேலூரில் பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**வேலூர், ஜூன் 26-**

**வேலூரில் ரூ.197.81 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள அரசு வேலூர் பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை மற்றும் ரூ.7 கோடி செலவில் 7 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கூடுதல் கட்டடங்கள் மற்றும் 2 துணை சுகாதார நிலையங்களுக்கான புதிய கட்டடங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

வேலூர் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள அரசு விழாக்களில் கலந்து கொள்வதற்காக நேற்று (25.6.2025) சென்னை, சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்து வேலூர் புறப்பட்டுச் சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு காட்பாடி இரயில் நிலையத்தில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

காட்பாடி இரயில் நிலையத்திலிருந்து அரசு வேலூர் பல்நோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை திறப்பு விழா நடைபெறும் அரசு பென்ட்லேண்ட் மருத்துவமனை வளாகம் செல்லும் வழிநெடுகிலும் முதலமைச்சர் அவர்களுக்கு சாலையின் இருபுறங்களிலும் பொதுமக்கள் திரண்டு உற்சாக வரவேற்பு அளித்தனர். அப்போது முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் அளித்த கோரிக்கை மனுக்களையும் பெற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.6.2025) வேலூர், அரசு பென்ட்லேண்ட் மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்ற விழாவில், தரை மற்றும் ஏழு தளங்களுடன் 197 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அரசு வேலூர் பல்நோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையை திறந்து வைத்தார். மேலும், வேலூர் மாவட்டத்தில் 7 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 7 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கூடுதல் கட்டடங்கள் மற்றும் 2 துணை சுகாதார நிலையங்களுக்கான புதிய கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டு மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதிகள் கிடைத்திட, புதிய அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களை கட்டுதல், மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மருத்துவக் கருவிகளை நிறுவுதல், அனைவருக்கும் நலவாழ்வு என்கிற உயரிய நோக்கினை செயல்படுத்தும் வகையில் “மக்களைத் தேடி மருத்துவம்” சாலை விபத்துக்களில் உயிரிழப்புகளை தடுக்கும் வகையில் “இன்னுயிர் காப்போம்-நம்மைக் காக்கும்-48”, சுகாதார நடைபாதை திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை வாயிலாக தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

**அரசு வேலூர் பல்நோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை**

வேலூர் மாவட்டம், அரசு பென்ட்லேண்ட் மருத்துவமனை வளாகத்தில் தரை மற்றும் ஏழு தளங்களுடன் கூடிய அரசு வேலூர் பல்நோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கட்டுவதற்கு 22.8.2023 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

அதன்படி, 2,15,278 சதுர அடி நிலப் பரப்பளவில், 3,77,263 சதுர அடி கட்டடப் பரப்பில் தரை மற்றும் ஏழு தளங்களுடன் 197 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள அரசு வேலூர் பல்நோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் திறந்து வைத்து, பார்வையிட்டார்.

இம்மருத்துவமனையின் தரைத்தளத்தில் மகளிர் நலப்பிரிவு, மகப்பேறு பிரிவு, அவசர சிகிச்சை பிரிவு, அவசரகால அறுவை சிகிச்சை அரங்கம், குழந்தைகள் அவசர சிகிச்சை பிரிவு, புறநோயாளிகள் பிரிவு, கதிரியக்க நோயறிதல் துறை, இரத்த மாதிரி சேகரிப்பு கூடம், சலவை துணி தொகுதி ஆகியவையும், முதல் தளத்தில் குழந்தைகள் அறுவை சிகிச்சை பிரிவு, இரத்த வங்கி, குழந்தைகள் பிரிவு ஆகியவையும், இரண்டாம் தளத்தில் குழந்தைகள் மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை பிரிவு, மருத்துவ உருவகப்படுத்துதல் ஆய்வகம், வளர் இளம் பருவத்தினருக்கான பிரிவு, குழந்தைகள் தீவிர சிகிச்சை பிரிவு ஆகியவையும், மூன்றாம் தளத்தில் பச்சிளம் குழந்தைகள் நலப் பிரிவு, பிறந்த குழந்தை தீவிர சிகிச்சை பிரிவு, பச்சிளம் குழந்தைகள் தொடர் கவனிப்பு பிரிவு ஆகியவையும், நான்காம் தளத்தில் மகப்பேறு கால முன் கவனிப்பு பிரிவு, மகப்பேறு கால பின் கவனிப்பு பிரிவு, மகப்பேறு தீவிர சிகிச்சை பிரிவு ஆகியவையும், ஐந்தாம் தளத்தில் பெண்கள் நலவியல் மருத்துவ பிரிவும், ஆறாம் தளத்தில் ஆய்வகங்கள், நுண்ணுயிரியல் பிரிவு, உயிர் வேதியியல் பிரிவு, நோய் கண்டறிதல் துறை ஆகியவையும், ஏழாம் தளத்தில் அறுவை அரங்கங்கள், மயக்க மருந்துக்கு பிந்தைய பராமரிப்பு பிரிவு ஆகியவையும் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், இம்மருத்துவமனையில் மொத்தம் 560 படுக்கைகள் மற்றும் 11 அறுவை சிகிச்சை அரங்குகள், 9 மின்தூக்கிகள், சமையலறை, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், பிணவறை மற்றும் உயர்மின்னழுத்த அறை போன்ற வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான 7 கூடுதல் கட்டடங்கள் மற்றும் 2 துணை சுகாதார நிலையங்களுக்கான புதிய கட்டடங்கள் திறப்பு**

வேலூர் மாவட்டம், காட்பாடி ஊராட்சி ஒன்றியம், சேர்க்காடு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 1.20 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டடம், காட்பாடி வட்டம், திருவலம் பேரூராட்சியில் 1.20 கோடி ரூபாய் செலவில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கட்டப்பட்டுள்ள புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம், ஒடுகத்தூர் பேரூராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பொது சுகாதார பிரிவுக் கட்டடம், வேலூர் ஊராட்சி ஒன்றியம், ஊசூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பொது சுகாதார பிரிவுக் கட்டடம், காட்பாடி ஊராட்சி ஒன்றியம், பொன்னை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 1.20 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டடம், வேலூர் மாநகராட்சி, லட்சுமிபுரம் நகர்ப்புற சுகாதார நிலையத்தில் 60 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டடம் மற்றும் தொரப்பாடி நகர்ப்புற சமுதாய சுகாதார நிலையத்தில் 1.20 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டடம்;

பேர்ணாம்பட்டு நகராட்சியில் 30 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நகர்ப்புற துணை சுகாதார நிலையத்திற்கான புதிய கட்டடம் மற்றும் அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியத்தில் மகமதுபுரம் துணை சுகாதார நிலையத்தில் 30 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடம்;

என மொத்தம் 7 கோடி ரூபாய் செலவில் 7 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கூடுதல் கட்டடங்கள் மற்றும் 2 துணை சுகாதார நிலையங்களுக்கான புதிய கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம். நாசர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ். ஜெகத்ரட்சகன், கதிர்ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி. நந்தகுமார், திருமதி அமுலு விஜயன், ப. கார்த்திகேயன், ஜே.எல். ஈஸ்வரப்பன், வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் மா. சுனில்குமார், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.வே.இரா. சுப்பு லெட்சுமி, மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் சங்குமணி, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்கத்தின் கூடுதல் இயக்குநர் டாக்டர் தேரணிராஜன், அரசு வேலூர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை முதல்வர் டாக்டர் மு.ரோகிணிதேவி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பயனாளிகள் நெஞ்சார்ந்த நன்றி

# வேலூரில் - ‘கலைஞர் கனவு இல்லம்’ திட்டத்தில் கட்டப்பட்டுள்ள வீடுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு!

**வேலூர், ஜூன் 26-**

**வேலூர் மாவட்டம், பூதூரில் “கலைஞர் கனவு இல்லம்” திட்டத்தில் கட்டப்பட்டுள்ள வீடுகளை பார்வையிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.**

கலைஞரின் கனவு இல்லம் திட்டம் முதன் முதலில் ‘கலைஞர் வீடு வழங்கும் திட்டம்’ என்ற பெயரில் 2010-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம் குடிசையில்லா தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்பதாகும்.

2030-ஆம் ஆண்டிற்குள் ‘குடிசையில்லா தமிழ்நாடு’ என்ற இலக்கை அடைந்திட 2024-2025 ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் ‘கலைஞரின் கனவு இல்லம் திட்டம்’ என்ற புதிய திட்டம் அறிவிக்கப்பட்டது. “கலைஞரின் கனவு இல்லம்” திட்டத்தின் கீழ்

2024-25 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் புதிய கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்கு ஒரு வீட்டிற்கு 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 3500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டிற்கு அனுமதி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

வேலூர் மாவட்டத்தில் கலைஞர் கனவுத் திட்டத்தின் கீழ் 2024-25 ஆம் ஆண்டில் 2711 வீடுகள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டு, இதுவரை 1973 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 738 வீடுகளின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், 2025-26 ஆம் ஆண்டில் 3500 பயனாளிகளுக்கும் என மொத்தம் 6211 பயனாளிகளுக்கு 217.38 கோடி ரூபாய் மதிப்பில் வீடுகட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீட்டின் பரப்பளவு 360 சதுர அடியாகும். இதில் ஒரு சமையலறை, ஒரு வரவேற்பறை மற்றும் கழிப்பறை அடங்கும்.

கலைஞர் கனவு இல்ல திட்டத்தில் 2024-25ஆம் ஆண்டு பூதூர் ஊராட்சியில் 17 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டு, இதுவரை 15 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 2 வீடுகளின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோன்று 2025-26ஆம் ஆண்டில் 12 வீடுகள் கட்டுவதற்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று (25.6.2025) வேலூர் மாவட்டம், பூதூரில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் கட்டப்பட்டுள்ள வீடுகளை ஆய்வு செய்து, பயனாளி திருமதி கங்கா பாய் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று, அவரது குடும்பத்தினருடன் கலந்துரையாடி, அவர்களது தேவைகள் குறித்து கேட்டறிந்தார். அப்போது, திருமதி கங்கா பாய் அவர்கள் வயதான காலத்தில் தனக்கு அரசின் உதவித்தொகை கிடைத்து வருவதாகவும், இவ்வீட்டில் தங்கி கல்லூரியில் படித்து வரும் தனது பேரனும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தில் உதவித் தொகை பெற்று வருவதாகவும், அதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டார்.

பின்னர், அருகிலுள்ள வீட்டில் ஐந்தாம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவி முதலமைச்சர் அவர்களிடம், தனது தாய், தந்தை காலையிலேயே வேலைக்கு சென்று விடுவதால் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் பள்ளியில் காலை சிற்றுண்டி உண்டு வருவதாகவும், இதற்காக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்வின்போது, நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.வே.இரா.சுப்பு லெட்சுமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# மக்கள் கொண்டாடும் முதல்வர் இங்கே!

வரலாற்றுச் சிறப்புமிக்க வள்ளுவர் கோட்டத்தில் முதல் நிகழ்ச்சியாக மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கையை ஏற்றம்பெற வைத்த, தமிழ்நாடு முதலமைச்சருக்குப் பாராட்டும் நன்றி அறிவிப்பும் தெரிவித்த நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் **“சத்தம் இல்லாத தனிமை கேட்டேன்”** என்ற பாடல் மெட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சாதனைகளை விளக்கும் பாடல் பாடப்பட்டது. அப்பாடல் அரங்கில் பிரம்மாண்ட வரவேற்பு பெற்றது.

இசை : இசையரசர் பரத்வாஜ்
பாடியவர்: பரத்வாஜ், மாலதி, செந்தில்தாஸ்
பாடல் : சொற்கோ இரா.கருணாநிதி
மெட்டு : சத்தம் இல்லாத தனிமை கேட்டேன்



மக்கள் கொண்டாடும் முதல்வர் இங்கே…!
சற்றும் ஓயாத முதல்வர் இங்கே…!
கண்ணுக்குள் காக்கின்ற முதல்வர் இங்கே…!
கலைஞரின் இரண்டாம் வடிவம் இங்கே…!

உரிமைக் குரலாய் முதல்வர் இங்கே…!
வெற்றி விரலாய் முதல்வர் இங்கே…!
கோடி மக்கள் நாடித்துடிப்பாய்…
ஓடி உழைக்கும் முதல்வர் இங்கே…!

புதுமைப் பெண்ணின் திட்டம் தந்து;
தமிழ்ப்புதல்வன் திட்டம் தந்து;
உரிமைத் தொகையை அள்ளித்தந்த;
உதய சூரியன் இங்கே…! இங்கே…!

கைம்பெண், முதியவர் உதவித்தொகையைக்
கருணையோடு தந்தவர் இங்கே…!
உங்கள் தொகுதியில் முதல்வர் என்று;
எங்கும் நன்மை தந்தவர் இங்கே…!

நீதி தவறா முதல்வர் இங்கே…!
நிம்மதி படைக்கும் முதல்வர் இங்கே…!
நாட்டைக் காக்கும் முதல்வர் இங்கே…!
ரோட்டில் நடக்கும் முதல்வர் இங்கே…!

காலை உணவுத் திட்டம் தந்து;
இல்லம்தேடிக் கல்வி தந்து;
வெற்றிக் கனியை எட்டிப் பறிக்கும்
ஒற்றை முதல்வர் இங்கே…! இங்கே…!

பூமிக்கெல்லாம் புதிதாய்த் திட்டம்
வாரி வழங்கும் முதல்வர் இங்கே…!
மனிதர் வாழத் திட்டம் தீட்டி;
மானுடம் காக்கும் முதல்வர் இங்கே…!

மண்ணுயிர் எல்லாம் தன்னுயிராக…
இன்னுயிர்க் காக்கும் முதல்வர் இங்கே…!

மேலோர் என்று யாருமில்லை…
கீழோர் என்று யாருமில்லை…
எல்லா மனிதனும் ஒன்றே என்ற;
இந்தியாவின் முதல்வர் இங்கே…!

இதயம் காக்கும் திட்டம் தந்து;
பாதம் காக்கும் திட்டம் தந்து;
கீழடி ஆய்வில் வெற்றிகள் தந்து;
நூலகம் அமைத்த முதல்வர் இங்கே…!

ஊசி மணி, பாசி விற்பவர்
இல்லம் காத்த முதல்வர் இங்கே…!
பேசும் பேச்சில் செயலில் வெல்லும்;
பீரங்கி போல முதல்வர் இங்கே…!

பெரியார், அண்ணா, கலைஞர் கனவை
சரியாய்ப் படைக்கும் முதல்வர் இங்கே…!
நெற்றிக் கண்ணின் வெற்றிப்படைக்கும்
ஒற்றைச் சூரியன் முதல்வர் இங்கே…!

மக்களைத்தேடி மருத்துவம் தந்த
கருணை பொழிந்த முதல்வர் இங்கே…!
வைக்கம் வீரர் வழியில் வந்த
வலிமை மிகுந்த முதல்வர் இங்கே…!

வருகிற காலம் நமக்கே என்று;
வசந்த காலம் நமக்கே என்று;
அறுபது ஆணைகள் நமக்கே படைத்த
அன்னை மனது முதல்வர் இங்கே…!

கடைக்கோடி திறனாளிக்கும்
உயிர்நாடி இங்கே…! இங்கே…!
சமூகநீதி படைத்த தலைவர்
சாதனை முதல்வர் இங்கே…! இங்கே…!

கல்வி தந்து, கருவிகள் தந்து;
சலுகைகள் எல்லாம் வாங்கித் தந்து;
வேலைவாய்ப்பு முகாம் தந்து;
விடியல் படைத்த முதல்வர் இங்கே…!

குறைகளை நீக்க வாரியம் அமைத்து;
குறைதீர்ப்பு மையம் அமைத்து;
நிதியுதவி அள்ளிக்கொடுத்து;
நித்தம் காக்கும் முதல்வர் இங்கே…!
மகளிர் விடியல் பயணம் படைத்து;
மாநிலம் போற்றும் முதல்வர் இங்கே…!
சேவை மையங்கள் அமைத்துக் கொடுத்துச்
சிக்கல் நீக்கும் முதல்வர் இங்கே…!

கோயில் எங்கும் தமிழே கேட்கும்
கோட்டை ஆளும் முதல்வர் இங்கே…!
அனைத்துச் சாதி மனிதரெல்லாம்
அர்ச்சகராக்கிய முதல்வர் இங்கே…!

ஒடுக்கப்பட்டோர் உரிமைகள் கேட்கும்
ஓய்வில்லாத முதல்வர் இங்கே…!
மக்கள் மத்தியில் நடந்து செல்லும்
மாநில உதயம் முதல்வர் இங்கே…!

மாற்றுத்திறனாளிகள் வாழ்வில்
ஏற்றம் பற்பல தந்தவர் இங்கே…!
ஆட்சிப் பொறுப்பில் அமர வைக்கும்
திராவிட மாடல் முதல்வர் இங்கே…!

மாற்றுத்திறனாளிகள் நம்மைத்
தி.மு.க.வின் அணிகளில் ஒன்றாய்
ஏற்றி வைத்த முதல்வர் இங்கே…!
எங்களைக் காக்கும் முதல்வர் இங்கே…!

அடையாள அட்டை நமக்குத் தந்து
ஆட்சி செய்யும் இதயம் இங்கே…!
உள்ளாட்சி அமைப்பிலே பிரதிநிதியாய்
நம்மைப் படைத்த உதயம் இங்கே…!

மாற்றுத்திறனாளிகள் வாழ்வை
மாற்றிப் படைத்த முதல்வர் இங்கே…!
நதியைப்போல மக்களைக் காக்கும்
உதயநிதியைத் தந்தவர் இங்கே…!



பேராசிரியர்
**சொற்கோ இரா.கருணாநிதி**